

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பறக்கை ஊராட்சியில் ரூ.17 இலட்சம் செலவில் பறக்கையில் கட்டப்பட்டுள்ள இ-சேவை மையத்தினை இன்று (10.09.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

செ.வெ.எண்: 625 நாள்:10.09.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊராட்சி முகமையின் மூலம் இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற பல்வேறு வளர்ச்சி பணிகளை இன்று (10.09.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பறக்கை ஊராட்சியில் மாநில நிதிக்குழு மானியம் (2015-2016) திட்டத்தின் கீழ் ரூ.3 இலட்சம் செலவில் சிவதுர்கா மருத்துவமனை அருகில் கட்டப்பட்டுள்ள பயணிகள் நிழற்குடையினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் ரூ.0.98 இலட்சம் செலவில் தாமரைகுளம் சாலை மற்றும் வழிகுளியம்மன் கோவில் சாலை ஆகிய இடங்களில் 200 மரக்கன்றுகள் நடும் பணிகளையும், கக்கன்புதூரில் ரூ.2 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பொதுகழிப்பறையையும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை தனித்தனியாக பிரிக்கும் பணிகளையும், ரூ.17 இலட்சம் செலவில் பறக்கையில் கட்டப்பட்டுள்ள இ-சேவை மையத்தினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனை தொடர்ந்து, பறக்கையில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான சிறப்பு கிராமசபை கூட்டத்தில் கலந்து கொண்டார். ஆய்வின்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திருமதி.ஏழிசை செல்வி, உதவி செயற்பொறியாளர்கள் திரு.ரசாக், திரு.திருநாவுக்கரசு, உதவி செயற்பொறியாளர்கள் திருமதி.கவிதா, திருமதி.மரிய தேவிகா, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பகவதி பெருமாள், பறக்கை ஊராட்சி தலைவர் திரு.சுந்தர் ஆகியோர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கன்னியாகுமரி மாவட்டம்.